பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 12 2025 SUNDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

*தலைப்புச் செய்திகள்*

1. மூத்த குடிமக்களின் நலனுக்காக பிரம்மகுமாரிகள் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. மின் விநியோக நிறுவனங்கள் நுகர்வோருக்கு பயன் அளிக்கும் வகையில் தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. இண்டிகோ நிறுவனம் இன்று ஆயிரத்து 650 விமானங்களை இயக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

4. சீனாவில் நேரிட்ட சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

5. உலகக்கோப்பை இறுதி துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் Aishwary Pratap Singh Tomar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>

மூத்த குடிமக்களின் நலனுக்காக பிரம்மகுமாரிகள் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் குருகிராமில் உள்ள பிரம்மகுமாரிகள் அமைப்பின் தியான மையத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

உணர்வுகளை ஒருநிலைப்படுத்துவதில் தியானம் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

உலக அளவில் தற்போது நிலவிவரும் பதற்றமான சூழலை தணிக்க தியானம் அவசியமாகிறது என்றும் குடியரசுத் துணைத் தலைவர் கூறினார்.

<<<<<<>>>>>>>

பிரதமரின் வீட்டுவசதித்திட்டம் ஏழைகளின் வீட்டு கனவுத் திட்டத்தை நனவாக்கியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அகமதாபாதில் இந்த திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளை திறந்துவைத்து அவர் பேசினார்.

ஏழைகளின் பாதுகாப்பான எதிர்காலத்துக்கு இந்த வீடுகள் அடித்தளமாக இருக்கும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று போபாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக கூறினார்.

இந்த தொழில்நுட்பம் முறையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

மின் விநியோக நிறுவனங்கள் நுகர்வோருக்கு பயன் அளிக்கும் வகையில் தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் கேட்டுக்கொண்டுள்ளார்.

மின் விநியோகத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்து புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தொழில்நுட்பத்தின் பயன்பாடு நஷ்டங்களை குறைக்க உதவிடும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மின் விநியோகத்தில் புதுமை தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட நிறுவனங்களுக்கான விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

<<<<<<>>>>>>>

வக்ஃப் சொத்துக்களை இணையதளத்தில் பதிவு செய்வதற்கான கால அவகாசம் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த இணையதளத்தை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, கடந்த ஜூன் மாதம் 6-ஆம் தேதி தொடங்கிவைத்ததாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இணையதளத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வக்ஃப் சொத்துக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

அறிவியல் ஆராய்ச்சியின் பலன்கள் மக்களை சென்றடைய வேண்டியதன் அவசியத்தை ஹரியானா முதலமைச்சர் திரு **Nayab Singh Saini** வலியுறுத்தியுள்ளார்.

பஞ்சகுலாவில் நடைபெற்றுவரும் சர்வதேச அறிவியல் திருவிழாவின் இரண்டாவது நாள் அமர்வில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஆராய்ச்சியின் மூலம் வேளாண் உற்பத்தியும், புதுமை கண்டுபிடிப்புகள் மூலம் தொழில்முனைவோரும் பயனடைவதை விஞ்ஞானிகள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு **Nayab Singh Saini** கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

புதுப்பிக்கதக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

சூரிய மின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நிதியுதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான நிதியுதவி நிறுத்தப்படுவதாக வெளியான செய்திகள் தவறானவை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

இண்டிகோ நிறுவனம் இன்று ஆயிரத்து 650 விமானங்களை இயக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

650 விமான சேவைகள் மட்டுமே ரத்து செய்யப்பட்டிருப்பதாக அந்த விமான நிறுவனத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிலை தொடர்ந்து மேம்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த விமான சேவை ரத்து காரணமாக 610 கோடி ரூபாய் அளவிற்கு கட்டணங்கள் பயணிகளுக்கு திருப்பி

வழங்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக, சிவில் விமான போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று ஒரேநாளில் பயணிகளின் 3 ஆயிரம் உடைமைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது நான்கு சதவீத கணக்கீட்டுப்படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 50 கோடியே 96 லட்சத்துக்கும் மேற்பட்ட கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில், 98 புள்ளி இரண்டு இரண்டு சதவீத கணக்கீட்டு படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் தற்காலிகமாகத்தான் நிறுத்தப்பட்டுள்ளதாக கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி கூறியுள்ளார்.

கொடிநாள் தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நாட்டின் பாதுகாப்புக்கு யாரேனும் அச்சுறுத்தல் ஏற்படுத்த முயற்சித்தால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

நமது பாதுகாப்புப்படைகளின் துணிச்சல் மிகு செயல்பாடுகளை கண்டு நாட்டு மக்கள் பெருமிதம் கொள்வதாகவும் தினேஷ் கே திரிபாதி கூறினார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்ட பல்வேறு தலைவர்களின் பங்களிப்பை காங்கிரஸ் புறந்தள்ளியதாக பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு **Sambit Patra** குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளார்களிடம் பேசிய அவர், வரலாற்றை மாற்ற முயற்சிப்பதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி தெரிவித்த குற்றச்சாட்டுகள் தவறானவை என்றார்.

வரலாற்றில் உள்ள பிழைகள் மட்டுமே தற்போது திருத்தப்படுவதாகவும் திரு **Sambit Patra** கூறினார்.

<<<<<<>>>>>>>

பஞ்சாபில் ஆயுதக்கடத்தலில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

சண்டிகரில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த காவல்துறை தலைமை இயக்குனர் திரு கௌரவ் யாதவ், அவரிடமிருந்து 5 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

சீனாவில் நேரிட்ட சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

Usu நகரம் அருகே உள்ள விரைவுச்சாலையில் 5 லாரி மற்றும் 7 கார்கள் ஒன்றன்மீது ஒன்று மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>>

யுக்ரைன் மீது ரஷ்யா வான்வழி தாக்குதலை நேற்றிரவு மேற்கொண்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பிரச்சினை தொடர்பாக, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புடன் தொலைபேசி மூலம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக யுக்ரைன் அதிபர் அறிவித்த நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 77 யுக்ரைன் ட்ரோன்கள் வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா கூறியுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான மோதலுக்கு தீர்வுகாணும் வகையில் பல்வேறு கட்ட பேச்சுக்கள் நடைபெற்றுவரும் நிலையில் இந்த தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

<<<<<<>>>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குளிரின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் ஒடிஷா மாநிலங்களில் நாளை வரை குளிரின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அஸ்ஸாம், மேகாலயா, நாகலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் இமாச்சலப்பிரசேத்திலும் அடுத்த இரு தினங்களுக்கு குளிரின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை இறுதி துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Aishwary Pratap Singh Tomar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **50** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் பத்து மீட்டர் பிரிவில் **Samrat Rana-**வுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

--------------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா பட்டம் வென்றார்.

---------------

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு **8** மணிக்கு தொடங்குகிறது.

--------------------

இந்தியா — தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது ஹாக்கிப்போட்டி இன்று கேப்டவுனில் நடைபெறுகிறது.

--------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sanskar Saraswat** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில அவர் **21-11, 17-21, 21-13** என்ற செட் கணக்கில், இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத்தை வென்றார்.

-------------------

**Taipei** ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் திருமுரு கணேஷும், மகளிர் பிரிவில் **Chikitha Taniparthi-**யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

அபிஷேக் வர்மா மற்றும் ஜோதி சுரேகா வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<END>>>>>>>**